ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம :

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௨. ரக்தாக்ஷிஸ்ரீ பங்குனிமீ பகுதி ௩.
Vol. 2. MARCH–APRIL 1925. No. 3.

உபயவேதாந்த ஐககண்ட்யம்.

(ஸ்ரீ. உப. வே. தேசிகவரதாசார்யஸ்வாமி எழுதுவது.)

இங்கு ஸம்ஸ்க்ருதவேதம், த்ராவிடவேதம் என்ற இரண்டும் ஒரே அபிப்பிராயமுடையன என்ற விஷயத்தை விளக்கத்தொடங்கியதால் அதற்கேற்றவாறு 'உபயவேதாந்த ஐககண்ட்யம்' என்று தலைக்குறிப்பிடலாயிற்று. ஐககண்ட்யமாவது:—ஒரே அபிப்பிராயமுடைமை.

ப்ருஹ்மத்தை அறியவேண்டுமென்ற விருப்பமுடையவன் "மாநாதீநா மேயஸித்தி:" என்றபடி ப்ரமாணத்தைக் கொண்டே அறியவேண்டும். ப்ரமாணங்கள்தாம் பல. அவற்றுள் வேதப்ரமாணமே சிறந்தது. ஸ்ரீய: பதியாகிய ஸர்வேசுவரன் தோஷமில்லாதவனும் கல்யாணகுணங்களுக்கு ஆகரமாயுமிருப்பதால் சேதனு சேதனமென்ற இரண்டினும் விலக்ஷணனுயிருப்பதுபோல அவனை யறிவிக்கிற வேதமும் அபௌருஷேயத்வம் (புருஷனால் செய்யப்படாமை) நித்யத்வம் (எப்பொழுதும் உள்ளதாயிருத்தல்) என்ற இரண்டினால் பெருமையுடையதாயிருப்பதால் சிறந்ததெனப்பட்டது. இதுவிஷயம் (2) "வேதாத்சாஸ்த்ரம் பரம்நாஸ்தி நதைவம் கேசவாத் பரம்" என்ற ஹரிவம்ச சுலோகத்தாலறியலாம். இந்த வேதம் ஸம்ஸ்க்ருதம், த்ராவிடம் என்ற இரண்டு பிரிவையுடையதாயிருக்கும்.

(2) இதன் பொருள் வேதத்தின் மிக்கதொரு சாஸ்திரமில்லை. கேசவனின் மிக்கதொரு தெய்வமில்லை. என்பதாம்.

இங்கு த்ராவிடவேதம் என்று குறிப்பித்தது ஆழ்வாரருளிய திவ்ய ப்ரபந்தத்தை. ஆழ்வாரால் சொல்லப்பட்ட ப்ரபந்தம், நித்யமான வேதத்திற் சேர்ந்ததென்பது எவ்வாறு பொருந்துமெனின்? ருஷிகளால் கண்டுவெளியிடப்பட்டமந்த்ரம் வேதாந்தர்க்கதமாவதுபோல ஆழ்வாரால் கண்டு வெளியிடப்பட்ட திவ்யப்ரபந்தமும் நித்யமென்பதில் விரோதமில்லாமையால் வேதமெனத் தட்டில்லை.

"வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே
வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமயணாத்மநா"

ஸர்வேசுவரன், தசரத குமாரனுக அவதரிக்கும்போது அவனுடையபரத்வத்தைச்சொல்லுகிற வேதமும் ராமாயணமாக அவதரிக்கும் என்று ஸ்காந்தத்திற் கூறியபடி அவன் ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களில் அர்ச்சையாக அவதரித்தபோது அந்தவேதம், திராவிட வேதரூபமாக அவதரித்ததென்றறியலாகும். இதனுல், ப்ரமேய வஸ்துவாகிய ஸர்வேசுவரன் ஸர்வசுலபமாயிருக்கும் அர்ச்சாவதாரங் கொள்ள அவனைக்குறித்துப் பேசுகின்ற வேதமும், ஸர்வசுலபமாயும் ஸர்வாதிகாரமாயுமுள்ள த்ராவிட வேதமாயிற்றென்பது விளங்கும்

இங்ஙனம் ஸம்ஸ்க்ருத வேதம், த்ராவிடவேதம் என்று குறிப்பிட்டதற்கிணங்க (உ) "ஸ்வம் ஸம்ஸ்க்ருத திராவிடவேத ஸூக்தை:" இத்யாதியால் பட்டர் முதலானுரும் (ஈ) "ஆம்நாயாராம் ப்ரக்ருதி மபராம் ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்" (ச) "த்ராவிட ப்ருஹ்ம தர்சீ" (ரு) "க்ருதிந: கமலாவாஸகாருண்யைகாந்திநோபஜே" "தத்தேயத்ஸூக்தி ரூபேண த்ரிவேதீ ஸர்வ யோக்யதாம்" இத்யாதியால் வேதாந்ததேசிகனும் அருளிப்பிருப்பது இங்கு அறியத்தக்கதே.

---

(2) ஸம்ஸ்க்ருத தமிழ்வேதங்களாம்.

(3) வேதத்தின் வேறுரூபமான வாக்யத்தொடர்ச்சியை (தமிழ்ரூபமான தொடர்ச்சியை)க்கண்டவரான.

(4) த்ராவிடவேதத்தைக் கண்டவர்.

(5) வேதங்கள் எவருடைய திருவாய்மொழியாக ஏற்பட்டதால் ஸகல விதமான பெருமையையும் அடைந்தனவோ அந்தத் திருவாய்மொழியை அருளிச்செய்தவரும், ஸ்ரீய: பதியின் கருணபாத்ரபூதரும் மஹாநுபாவருமான ஆழ்வாரை எப்பொழுதுஞ் சேவிக்கிறேன்.

இந்த வேதத்தின் பூர்வபாகம் (முற்கூறு) பகவதாராதன ரூபமான கர்மத்தைச் சொல்லுவது. உத்தரபாகம் (பிற்கூறு) என்கிற வேதாந்தம், ப்ருஹ்மத்தை நேராகச் சொல்வது. இது, உபநிஷத்தென்று சொல்லப்படும். இந்த ஸம்ஸ்க்ருதோபநிஷத்து ஸர்வேசுவரனது ஸ்வரூபரூபகுணவிபூத்யாதிகளைத்தெளிவாகச் சொல்வதுபோலத் திருவாய்மொழியும் ஸர்வேசுவரனுடைய ஸ்வரூபரூபகுணவிபூத்யாதிகளைத் தெளிவாகச் சொல்லுகையால், இது த்ரமிடோபநிஷத் என்றே வேதாந்தவித்துக்களால் வ்யவஹரிக்கப்படுகிறது. இது விஷயம் "த்ரமிடோபநிஷத் ஸங்கதி" "த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி" என்று வழங்கப்படும் க்ரந்தங்களின்பெயர்களாலும் அறியலாம்.

இன்னும் இந்த உபயவேதாந்தங்களை ஆராய்ச்சி செய்யும்பொழுது, வேதவ்யாஸரால் செய்யப்பட்ட ஸம்ஸ்க்ருத வேதாந்தவிசாரமான சாரீரகமென்னும்சாஸ்த்ரத்தின் உட்பொருளை ஆழ்வாரவதரித்துத் திருவாய்மொழியால் வெளியிட்டார். அதன்பிறகு, "மாறனடிபணிந்துய்ந்தவ"ராகிய உடையவர் அவதரித்துத் திருவாய்மொழிகொண்டு ப்ருஹ்மஸூத்ர நிர்ணயஞ்செய்து 'ஸ்ரீபாஷ்யம்' இட்டருளினர் என்பது விளங்கும். இந்த வரலாறு "*ஆதௌ சாரீரகார்த்தக்ரமமிஹ விசதம் விம்சதிர் வக்திஸாக்ரா" என்கிற தேசிகன் ஸ்ரீஸூக்தியாலும், "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்கியங்கள் ஒருங்குவிடுவர்" என்ற அழகியமணவாளப் பெருமாள்நாயனார் அருளிச்செயலாலும், †"புராஸூத்ரைர் வ்யாஸ: ச்ருதிசதசிரோர்த்தம் க்ரதிதவாந் விவவ்ரேதம் ச்ராவ்ய வகுளதரதாமேத்ய ஸபுந:, உபாவேதௌ க்ரந்தௌ கடயிதுமலம் யுக்திபிரஸௌ புநர் ஜஜ்ஞே ராமாவரஜ இதி ஸப்ருஹ்ம முகுர:" என்ற ஆச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தியாலும் தெளிவாகிறது.

* (இதன்பொருள்) திருவாய்மொழியின் முதலிருபது பாட்டும் சாரீரகமீமாம்ஸார்த்தத்தைத் தெளிவாகவும், பூரணமாகவும் சொல்லுகிறது.

† (இதன்பொருள்) முன்வியாஸபகவானனவர் வேதாந்தார்த்தத்தைஸூத்ரரூபமாக அருளிச்செய்தார். அவரே மறுபடியும் அந்த ஸூத்ரார்த்தத்தை வகுளாபரணராய் அவதரித்து யாவரும் கேட்பதற்கு இனிதான த்ராவிட ரூபமான விவரண ப்ரபந்தமாகச் செய்தார். இந்த இரண்டு க்ரந்தங்களையும் யுக்தியால் ஐககண்ட்யம்செய்யவேண்டியதன்பொருட்டு மறுபடியும் இவரே ராமாநுஜனென்கிற திருநாமத்தோடு அவதரித்தார். இவரே ப்ருஹ்மஸ்வரூபத்தைக் கண்ணாடிபோல் காட்டியவராவர்.

இன்னமும் உபயவேதாந்தங்களும் ஒன்றை ஒன்று தழுவியே அர்த்தங்களைத் தெரிவிக்குமென்பது அந்தந்த வாக்யத்தால் அறியலாகும். அதுவருமாறு:— ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் "யேதத்ரா ப்ராஹ்மணாஸ் ஸம்மர்சிந:" என்றும் "ப்ருஹ்ம வாதிநோ வதந்தி" என்றும், த்ராவிடவேதாந்தத்தில் 'உளன்சுடர் மிகு சுருதியுள்' என்றும் சொல்லுகிறவாக்யங்களால் ஒன்றை ஒன்று சுட்டி உணர்த்துகின்றதென்பது தெளிவாயிற்று. இதை உட்கொண்டே ஸ்ரீ ஆளவந்தாரும் *"விதயச்ச வைதிகாஸ் த்வதீய கம்பீர மனோநுஸாரிண:" என்று அருளிச்செய்தார்.

இனி, திருவாய்மொழி ஸூத்ரார்த்தங்களை உட்கொண்டுளதென்பது நிரூபிக்கப்படும். முன் சாரீரகமீமாம்ஸை என்று சொல்லப்பட்ட ப்ருஹ்மஸூத்ரம் நான்கு அத்யாயங்களையுடையதாயிருக்கும். அந்த நான்கு அத்யாயங்களும் நான்கு அர்த்தங்களைப் போதிப்பிக்கும். அவையாவன:—"காரணத்வ மபாத்யத்வம் உபாயத்வ முபேயதா" என்கிறபடி காரணத்வமும், அபாத்யத்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாம். அவற்றுள் முதலத்யாயத்தில் காரணத்வம் சொல்லப்படுகிறது. இரண்டாம் அத்யாயத்தில் அபாத்யத்வம் சொல்லப்படுகிறது. அபாத்யத்வமாவது:— பாதிக்கப்படாமை. இந்த அத்யாயத்தில் யாதொன்றுலுங் குறைவில்லாத ஸர்வபரிபூர்ணனை ஸர்வேசுவரனுக்கு ஒரு ப்ரயோஜனம் பெறவேண்டியதில்லை. அங்ஙனமிருக்க ஸ்ருஷ்டியாதிகள் கூடும்படி எங்ஙனமென ஆக்ஷேபித்துக்கொண்டு லீலையாதலால் கூடுமென்று விரோதிபரிகாரஞ் செய்யப்படுகிறது. மூன்றும் அத்யாயத்தில் உபாயத்வஞ் சொல்லப்படுகிறது. நான்காம் அத்யாயத்தில் ப்ராப்யத்வம் சொல்லப்படுகிறது.

இந்த நான்கு அத்யாயங்களின் அர்த்தங்களும் திருவாய்மொழியின் முதற்பாசுரமாகிய 'உயர்வற உயர்நலம்' என்பதனுள் அமைந்திருக்கின்றன. அவைவருமாறு:—முதலத்யாயத்தில் சொன்ன காரணத்வமும், ததாக்ஷிப்தங்களான கல்யாணகுணங்களும் 'நலமுடையவன்' என்பதனுல் சொல்லப்படுகின்றன. இரண்டாம் அத்யாயத்திற் சொன்ன அபாத்யத்வம், 'உயர்வறவுயர்' என்பதனுல் சொல்லப்படுகிறது. இதனுல் இரண்டாம் அத்யாயத்தின் அர்த்தம் எவ்வாறு

(*) இதன்பொருள்) வேதவிதிகளும் உன்னையடைந்திருக்கின்ற பெரியோர்களின் கம்பீரமான ஹ்ருதயத்தை அநுஸரிக்கின்றன; என்பதாம்.

கிடைக்கிறதென்றால்; உயர்வு—வருத்தம். வருத்தமறவுயர்கின்ற என்பது பொருள். இதனால் ப்ருஹ்மாதிகளுடைய குணங்களுக்கு ஒரு உயர்வுண்டாகும்பொழுது தபஸ் முதலியவைகளால் வருந்தியுண்டாவதுபோலில்லாமல் ஸ்வாபாவிகமானவுயர்த்தியையும் கல்யாணகுணங்களையுமுடையனென்பது விளங்கும். மேலும் காரணமாகும்பொழுது லீலையாக ஜகத் ஸ்ருஷ்டிகளைச்செய்கிறானென்ற பொருளும் கிடைக்கிறபடியால் "லோகவது லீலா கைவல்யம்" என்ற அர்த்தமுங் காட்டப்பட்டதாயிற்று. 'மயர்வு' என்ற பதத்தால் மூன்றும் அத்யாயம் முதற்பாதத்திற் சொல்லப்பட்ட அஜ்ஞானத்திற்குரிய சரீர ஸம்பந்தமான ஜீவதோஷம் சொல்லப்பட்டது. 'மதிநலம்' என்பதனால் மூன்றும்அத்யாயம் மூன்றும்பாதத்திற்சொல்லப்பட்ட ஸாத்யோபாயமான பக்தி சொல்லப்பட்டது. 'அருளினன்' என்பதனால் "உபபத்தே:" என்ற ஸூத்திரத்திற் சொன்ன ஸித்தோபாயத்தின் உபாயத்வம் சொல்லப்பட்டது. 'அயர்வறுமமரர்களதிபதி' என்பதனால் நான்காம் அத்யாயத்திற் குறிப்பிடப்பெற்ற அர்ச்சிராதிகளான ஆதிவாஹிகர்கள் சொல்லப்படுகிறார்கள். 'துயரறு' என்பதனால் "உத்தர பூர்வாகயோ:" என்ற ஸூத்திரத்திற்சொன்ன அவித்யா நிவிர்த்தி சொல்லப்பட்டது. 'சுடரடிதொழு'என்பதால் 'ஸம்பத்யாவிர்பாவ:" என்றஸூத்ரத்திற் சொல்லுகிற ஸ்வாபாவிக குணாவிர்ப்பாவகார்யமான தொழுகை சொல்லப்பட்டது. இது நிற்க,

ஸ்ரீ பாஷ்யகாரர்; 'உயர்வறவுயர்நலம்' என்ற முதற்குறிப்புள்ள பாசுரமானது ப்ருஹ்மசூத்ரார்த்தத்தை உட்கொண்டிருப்பதைத் தாமருளிய மங்களசுலோகத்தில் விளக்கிக்காட்டியிருக்கிறார். அது வருமாறு:—

*"அகிலபுவன ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே
விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே
ச்ருதி சிரஸி விதீப்தே ப்ருஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்தி ரூபா"

(*) (இ-ள்) ஸகல புவனங்களுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை லீலையாகவுடையவனும் சரணாகதஸகலஜீவஸம்ரக்ஷண தீக்ஷிதனும், வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்தவிளக்காயும், ப்ரஹ்மஸ்வரூபியாயும், உயர்வற வுயர்ந்தவனுமிருக்கின்ற ஸ்ரீநிவாஸனிடத்தில் பக்தி ரூபமான புத்தியானது எனக்கு உண்டாகவேண்டும்.

இந்த சுலோகத்தில் 'உயர்வற' என்ற பாட்டில் உயர்வு என்ற நிஷேதபத முன்பாக அருளியதுபோல இந்த சுலோகத்திலும் அகில என்ற நிஷேதபத முன்னாகத் தொடங்கப்பட்டது. நூலாரம்பத்தில் மங்களங் கூறவேண்டிய முறையிருக்க அமங்கலபத முன்னாகத் தொடங்கலாமோவென்னில்? ந கிலம் யத்ர என்கிற வ்யுபத்தியுடைய அகிலபதத்தின் அகாரமானது, 'கில' என்ற அமங்கல பதத்தை விலக்குகிற நிஷேதமாதலால் மங்களத்தைச் சார்ந்ததாம். ஆதலால் தொடங்கலாமென்க. இதுநிற்க, அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே என்ற விசேஷணங்களால் 'உயர்வற வுயர்நலமுடையவன்' என் பதனால் சொல்லப்பட்ட ஜகத்காரணத்வம் விளக்கப்பட்டது. 'விநத' என்ற பதத்தால் 'மதிநலம்' என்பதின் அர்த்தமான பக்தி சொல்லப் பட்டது. 'ரக்ஷைகதீக்ஷ' என்பதனால் 'துயரறுசுடரடி' என்பதிற் கூறப்பட்ட அநிஷ்ட நிவிருத்தி பூர்வக இஷ்ட ப்ராப்தி சொல்லப் பட்டது. 'விநத' என்பதனால் பக்தியால் ஸத்தைபெற்றமை குறிக் கப்படுகிறது. இதனால் பக்தி பிறப்பதற்கு முன்பு ஸத்தை இல்லை என்பது தெரிகிறது. இவ்வர்த்தம் 'மதிநலமருளினன்' என்ற விடத் தில் எனக்கருளினன் என்றில்லாமையால் பக்தி பிறப்பதற்குமுன் தமக்கு ஸத்தை இன்மையை விளக்க அவ்வாறு கூறினார். பக்தி வந்த பின் தமக்கு ஸத்தை உண்டானதை என்மனனே என்று கூறுகிறார். 'வ்ராத' என்பதனால் ஸம்பந்த ஸம்பந்திகளும் கூறப்படுகிறார்கள். எனக்கு மயர்வற என்றில்லாமையால், தம்மைச் சேர்ந்தவர்களும் பலத்தை அநுபவிப்பதில் உட்படுத்துகிறார். தம்மைச் சேர்ந்தவர் களையும் உளப்படுத்திக்கொள்வது ஆழ்வாருக்குரிய இயற்கையாம். இதுவிஷயம் "பொய்நின்ற" "கேசவன்றமர்" என்ற இவ்விடங்களில் யாமென்றும், எமரென்றும் பிறர்களுக்காகத் தாமேறிட்டுக்கொண்டு அருளினமை காணலாம். 'விநத' என்பதனால் பக்தி கிடைத்திருக் கச் செய்தேயும் பக்திரூபா என்று சொல்லியதினால் இதிற் சொல்லப் படுகிற பக்தியானது, பிரார்த்தித்தே பெறத்தக்கதென்பது விளங்கு கிறது.

இது பிரார்த்தநீயமென்பது நான்காவதான பலாத்யாயத்தில் "ஆவ்ருத்திரஸக்ருத்" இத்யாதி ஸூத்ரத்தால் பக்தியை விசாரித்ததி னால் அறியலாகும். இன்னும் விசாரிக்கவேண்டுமென்று சொல்லு தற்குரிய இடத்தில் "ஜிஜ்ஞாஸா" இச்சிக்கவேண்டுமென்று சொல் லப்பட்டிருக்கிறது. இங்ஙனம் சொல்லுதற்கு "நிதித்யாஸி தவ்ய:"

என்ற சுருதியே மூலமாகும். அவ்விடத்திலும் அவ்வாறு கூறுதற்குக் காரணம் அது பிரார்த்தித்தே பெறத்தக்கதென்பதைக் காட்டுவதற்காம்.

இந்த சாஸ்திரத்திற் சொல்லப்படுகிற பக்தி பகவத் காமமென்று சொல்லப்படும். இந்த பக்தி ப்ரஹ்லாதாழ்வானுல் *"யாப்ரீதி:" இத்யாதியால் பிரார்த்திக்கப்பட்டதாம். இப்படிப்பட்ட பகவத் காமமானது, எதிர்த்தலையைப் பெண்ணாகப் பேசப்பண்ணும். சாமான்ய ஸ்த்ரீ விஷயத்தைப்பற்றிய காமமானது அதிகரிக்குமானுல் அது பெண்களும் புருஷபாவத்தைப் பெற நினைக்கப்பண்ணுமாகில், அதிவிலக்ஷணமான பகவத்விஷயத்தில் கேட்கவேண்டா. இவ்விஷயம் தேசிகன் "பாஞ்சாலீ" என்ற சுலோகத்தில் அருளிச்செய்திருக்கிறுர். அது வருமாறு:-

"பாஞ்சாலீ காத்ர சோபா ஹ்ருத ஹ்ருதய வதூவர்க்க பும்பாவ நீத்யா
பத்யௌ பத்மாஸஹாயே, ப்ரணயிநி பஜத: ப்ரேயஸி பாரதந்த்ரிய:
பக்தி: ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி முநேர் பாவபந்த ப்ரதிம்நா......"

என்பதாம். த்ரௌபதியின் அவயவ சோபையானது பெண்களை ஆணுடையுடுத்தப் பண்ணுவதுபோல ஆண்மகனைப் பெண்ணாகப் பேசப்பண்ணும் புருஷோத்தம விஷயத்திற்செய்யும் பக்தியானது, ச்ருங்கார ரூபமாகப் பரிணமிக்கிறது. இதனுல் பக்தியானது பகவத் காமமென்பது பெறப்படும். ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் விதிக்கப்பட்ட பக்தியின் பரிணாமமான ச்ருங்காரம், திருவாய்மொழியில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. இதனுல் உபயவேதாந்தங்களும் ஒரே அபிப்ராயமுடையன என்பது துரைக்கலாயிற்று. இதுபோல ஆங்காங்கு வருவது கண்டு உய்த்துணர்ந்து கொள்க.

ஸ்ரீ பாஷ்யகாரர் திருவாய்மொழியைச் சாதனமாகக் கொண்டு ஸூத்ர நிர்ணயஞ்செய்த உபகார ஸ்மிருதி தோற்ற 'அகில புவந'

(*) "யாப்ரீதி ரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ
த்வாமநு ஸ்மரதஸ் ஸாமே ஹ்ருதயாந் மாப ஸர்பது"

இதன் பொருள் விவேகமில்லாதவர்களுக்கு விஷயங்களில் ப்ரீதியானது விட்டு நீங்காதிருக்குமோ அத்தகைய ப்ரீதியானது உன்னைநினைத்துக்கொண்டிருக்கிற எனக்கு ஹ்ருதயத்தை விட்டு நீங்காதிருக்கவேண்டும்; என்பதாம்.

என்ற சுலோகத்திற்கு ஆழ்வார் விஷயமாக அர்த்தஞ் செய்துகொள்வ தற்கு ஏற்றவாறு அருளிச்செய்திருக்கிறார். அதுவும் இங்கு குறிப் பிடத்தக்கதாம்.

அது வருமாறு:— 'அகிலபுவந ஜன்மாதி லீல: யஸ்யஸ:' ஸ்ருஷ்டி முதலானதுகளை லீலையாகவுடைய ஸர்வேசுவரன் யாதொரு ஆழ்வாருக்கு 'உண்ணுஞ்சோறு' என்கிற பிரகாரம் எல்லாமோ அவர் என்று முதல் விசேஷணத்திற்குப் பொருள். 'விநத விவித பூத வ்ராத ரக்ஷைகதீக்ஷே' என்பதற்குத் தம்மை வணங்கின மதுரகவி நாதமுனிபோல்வார்கட்குத் திவ்யப்ரபந்த ப்ரதாநாதியால் ரக்ஷிக்கும வரென்று பொருள். 'சுருதி சிரஸி விதீப்தே' என்றது திருவாய் மொழியாகிய வேதாந்தத்தில் நிகமப்பாட்டில் (இறுதிப் பாட்டில்) விளங்குகிறவர் என்றவாறு. திருக்குறுங்குடி நம்பியே நம்மாழ்வாராக அவதரித்தார் என்பது ப்ரஸித்தியாதலால் 'ப்ருஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்று சொல்லப்பட்டது. 'மமபரஸ்மிந்' எனக்கு அபிமதமாயிருக்கிற பரதேவதையான ஆழ்வாரிடத்தில் எல்லோருக்கும் பக்தியுண்டா யிடுக; என்பதாம்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ தத்வதிவாகரம்.

[48-ம் பக்கத்தொடர்ச்சி.]

சும— ஸ்வாமி! தேவரீர் அருளிச்செய்த ப்ரமாணங்களால் ஆசார்ய வசனங்களை நம்பவேண்டுமென்றும், அவர் வசன மே வேதத்திற் கொப்பாமென்றும், அந்த நம்பிக்கையே எல்லாவற்றிற்கும் முக்யகாரணமென்றுந்தெரிந்து கொண் டேன். ஆனால் ஆசார்யநிஷ்டையை (ஸத்குரு பக்தியை) எல்லாவற்றிற்கும் முக்யகாரணமென எந்த ப்ரமாணத்தால் சொல்லப்பட்டுளது? இது, பரமபுருஷார்த்த மென்கிற மோக்ஷத்திற்கு காரணமாவது எப்படி? அல்லது இதுவே பரமபுருஷார்த்த மோக்ஷமா? இவைகளை முன்னோரின் சுருதிவாயிலாக அருளிச்செய்யவேண்டும்.

சுகு— ஞானமனுட்டானமிவைநன்றாகவேயுடைய
ஞானகுருவையடைந்தக்கால்—மாநிலத்தில்
தேனார்கமலத்திருமாமகள்கொழுநன்
றானேவைகுந்தந்தரும்.

சும— இதன் பொருள் என்ன?

சுகு— பெரிய பூமியில் வாழ்கின்றவர்களே! அறிவும், அறிந்தபடி ஒழுகும் ஒழுக்கமும், ஆகிய இவைகள் பூரணமாகவுடைய ஸத்குருவை யடைந்தால் தேன்மிகுந்த தாமரைப்பூவை யுடைய லக்ஷ்மி தேவியின் நாயகனான எம்பெருமான் தானே வைகுந்தத்தைக் கொடுப்பான் என்பதாம்.

சும— இன்னும் வேறு பிரமாணமுண்டா?

சுகு— உண்டு.

சும— அதையும் அருளிச்செய்யவேண்டும்

சுகு— உய்யநினைவுண்டாகிலுங்குருக்கள் தம்பதத்தே
வையுமன்புதன்னையிந்தமாநிலத்தீர்—மெய்யுரைக்கேன்
பையரவின்மாயன்பரமபதமுங்களுக்காம்
கையிலங்குநெல்லிக்கனி.

சும— இதன் பொருளென்ன?

சுகு— இந்தப் பெரியபூமியில் வாழ்கின்றவர்களே! உண்மையாகச் சொல்லுகிறேன். உங்களுக்கு உயிர்வாழ வேண்டுமென்ற நினைவிருக்குமாகில் பக்தியை உங்களாசார்யன் திருவடிகளிலே இருத்தக் கடவீர்கள். படங்களையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேசுவரனது பரமபதமானது, உள்ளங்கையில் விளங்குகின்ற நெல்லிக்கனிபோல ஸ்வாதீனமாய்விடும் என்பதாம்.

சும— இவ்வளவுதானா இன்னும் பிரமாணம் உண்டா?

சுகு— உண்டு.

சும— விளக்கி அருள்க?

சுகு— பின்பழகராம்பெருமாள்சீயர்பெருந்திவத்தில்
அன்பதுவுமற்றுமிக்கவாசையினால்—நம்பிள்ளைக்
கானவடிமைகள்செய்யந்நிலையை நன்னெஞ்சே
ஊனமறவெப்பொழுதுமோர்.

சும— இதன் பொருள் என்ன?

சுகு— பின்பழகராம் பெருமாள் சீயர் என்பவர் பெரிய சுகத்தை யுடைய மோக்ஷத்தில் சிறிதும் ஆசையில்லாமல் பக்தியோடு தம்மாசார்யரான நம்பிள்ளைக்கு அநுகூலமான கைங்கர்யங்களைச் செய்கின்ற அந்த நிஷ்டையை நல்ல நெஞ்சே! ஒன்றுங்குறையாமல் ஸர்வகாலமும் அநுஸந்திக்கக் கடவாய் என்பதாம். இவ்வாறு கூறியிருப்பதால் இந்த ஆசார்ய பக்தியே உத்தாரகமாம் (ஆத்மோஜ்ஜீவன ஹேதுவாம்)

சும— ஆசார்யனே முக்யனென்று உயர்த்திச் சொல்லிவிட்டால் பகவத்பக்தி யிருக்கவேண்டாவா?

சுகு— ஆசார்யன் விஷயத்தில் பக்தியில்லாவிட்டால் ஸர்வேசுவரன் அவர்களுக்கு நல்லகெதி கொடுக்கமாட்டான். ஆதலால் ஆசார்ய பக்தியே முக்யமாம்.

சும— இவ்விஷயம் எவ்விடத்திற் சொல்லப்பட்டுளது?

சுகு— தன்குருவின்றாளிணைகள் தன்னிலன்பொன்றில்லாதார்
அன்புதன்பால்செய்தாலுமம்புயைகோன்—இன்பமிகு
விண்ணாடு தானளிக்கவேண்டியிராணுதலால்
நண்ணாரவர்கள் திருநாடு.

சும— இதன் பொருள் என்ன?

சுகு— தன் ஆசார்யன் திருவடிகளில் சிறிதும் பக்தி யில்லாதவர்கள் தன் விஷயத்தில் பக்தி செய்தாலும் அவர்களுக்கு லக்ஷ்மிநாயகனான ஸர்வேசுவரன் ஆநந்தமிகுந்த பரம

பதத்தைக் கொடுப்பதற்கு விரும்பமாட்டான். ஆதலால் ஆசார்ய பக்தியில்லாதவர்கள் பரமபதத்தைக் கிட்டமாட்டார்கள் என்பதாம்.

சும— தேவரீருடைய வசனத்தால் பகவான்வேறு ஆசார்யன் வேறு என்பதாகத் தோற்றவில்லையே? அவர்களே பகவானுப்விடுவார்களோ?

சுகு— ஓ! அதைக்கேட்கவில்லையா? அதற்குப் பிரமாணஞ் சொல்லுகிறேன். கேட்பாயாக.

சும— அருளிச் செய்யவேண்டும்.

சுகு— ஏதங்களாயினவெல்லாமிறங்கவிடுவித்தென்னுள்ளே
பீதகவாடைப்பிரானார்பிரமகுருவாகிவந்து
போதிற்கமலவன்னெஞ்சம்புகுந்துமென்சென்னித்திடரில்
பாதவிலச்சனைவைத்தார்பண்டன்றுபட்டினங்காப்பே.

பெரியாழ்வார், கர்மத்தையும், வியாதியையும், யமபடரையும்பார்த்து "நீங்கள் பண்டைத்தேஹமும், ஆத்மாவுமென்றிருக்கவேண்டா. ஸர்வேசுவரன் திவ்ய தேசங்களிற் பண்ணும் விருப்பமெல்லாம் என் தேஹத்திலும், ஆத்மாவிலும் பண்ணிக்கொண்டு புகுந்தான். ஆதலால், இனி நீங்கள் ஜீவிக்கவேண்டுமென்ற கருத்துடையீர்களாய் இருப்பீர்களாகில் இங்குநின்றும் போகக்கடவீர்கள்" என்று அருளிச்செய்கிற ப்ரகரணத்தில், இங்குப் பீதாம்பரத்தை ஆடையாகவுடைய ஸர்வேசுவரன் ப்ருஹ்மத்தை உபதேசிக்கின்ற ஆசார்யனாகவந்து, என் ஹ்ருதயத்திற் புகுந்து, என்னிடத்திலுள்ள சகல குற்றங்களையும் போக்குவித்து என் தலையில் தம் திருவடியாகிய அடையாளத்தை வைத்தான். ஆதலால் கர்மங்களே! வியாதிகளே! யமபடர்களே! நீங்கள் என்னைவிட்டுப் போகக்கடவீர்கள் என்றார். இதனால் ஆசார்யனும், ஸர்வேசுவரனும் வேறில்லை ஒருவனே என்று சொல்லப்பட்டது.

சும— இதுவரையிலும், தேவரீர் அருளிச் செய்ததினால் ஆசார்யனே உத்தேசியன் என்று தெரிந்துகொண்டேன்.

சுகு— இன்னும் இதுவிஷயத்தில் உனக்கு ஏதேனும் சந்தேகம் உண்டோ?

சும— ஒரு சந்தேகமாத்ரம் உண்டு.

சுகு— அது எது?

சும— தேவரீர் அருளிச்செய்தவை எல்லாம் தென்மொழி ப்ரமாணங்களாகவே இருக்கின்றன. இதற்கு வடமொழி ப்ரமாணம் உண்டோ?

சுகு— உண்டு.

சும— அதையும் அருளிச்செய்யவேண்டும்.

சுகு— "குருரேவ பரம் ப்ருஹ்ம குருரேவபராகதி..." என்ற இது போன்ற பல ப்ரமாணங்கள் உண்டு.

சும— இதன் பொருள் என்ன?

சுகு— குருவே பரப்ருஹ்ம ஸ்வரூபி. குருவே மேலான தஞ்சம் என்பதாம்.

சும— குரு, ஆசார்யன் என்ற பதங்களுக்குப் பொருள் என்ன?

சுகு— கு—அஜ்ஞானமாகிய இருட்டு, ரு—அதன் நிவர்த்தி, ஆக அஜ்ஞானாந்தகாரத்தைப் போக்குமவன் என்பதாம். ஆசார்யன் என்பதற்குத், தான் ஸகல சாஸ்திரங்களின் மர்மங்களை உள்ளபடி கற்றுணர்ந்து, அதன்படி அநுஷ்டித்துத் தன்னையடுத்த சிஷ்யர்களுக்குச் சந்தேகஜ்ஞானம், விபரீதஜ்ஞானம் நீங்கும்படி கற்பித்து, அவர்களும் அதன்படி அநுஷ்டிக்கும்படி செய்யவல்லவனென்பது பொருளாம்.

சும— குரு, ஆசார்யன் என்ற பதங்களுக்குப் பொருள் நன்றாய்த் தெரிந்துகொண்டேன். சிஷ்யன், சாத்ரன் என்ற பதங்களுக்குப் பொருள் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சுகு— அப்படியானல் அவற்றிற்குப் பொருள் கூறுகிறேன் கேட்பாயாக. பகவத்விஷயத்தில், திருவநந்தாழ்வானைப்போல ஆசார்யவிஷயத்தில் ஸர்வதேச (எல்லாத்தேசத்திலும்) ஸர்வகால (எல்லாக்காலத்திலும்) ஸர்வாவஸ்தையிலும் (எல்லாச்சமயத்திலும்) சேஷவ்ருத்தி (பணிவிடை) செய்கின்ற காரணம்பற்றிச் சிஷ்யனென்று வழங்கலாயிற்று. சத்ரமாவது:— குருவினுடைய தோஷத்தை மறைத்தல். அதைத்தனக்கு ஸ்வரூபமாகவுடையவன் சாத்ரன், ஆக குருவினுடைய தோஷத்தைப் பாராட்டாதிருப்பவனுதல் பற்றி சாத்ரனென்று பெயர் வழங்கலாயிற்று.

சும— திருவநந்தாழ்வான் பகவத் விஷயத்திற் செய்கின்ற கைங்கர்யம்போல என்று எடுத்துக்காட்டினீரே அதன் விஷயமென்ன?

சுகு— சென்றால்குடையாமிருந்தால்சிங்காசனமாம்
நின்றால்மரவடியாம்நீள்கடலுள்—என்றும்
புணையாம்மணிவிளக்காம்பூம்பட்டாம்புல்கும்
அணையாம்திருமாற்கரவு.

சும— இதன்பொருள்என்ன?

சுகு— ஸ்ரீய: பதியாகிய ஸர்வேசுவரனுக்கு அடிமைபூண்டிருக்கிற திருவநந்தாழ்வான், அவன் உலாவத் திருவுள்ளம் பற்றிக் குடையை விரும்பினுல் குடையாகவும், இருக்கத் திருவுள்ளம்பற்றி ஸிம்ஹாஸநத்தை அபேக்ஷித்தால் ஸிம்ஹாஸநமாகவும், நிற்கத்திருவுள்ளம்பற்றிப் பாதுகையை விரும்பினுல் பாதுகையாகவும், கண்டுயிலத்திருவுள்ளங் கொண்டு படுக்கையை விரும்பினுல் எக்காலத்திலும் கடலில் படுக்கையாகவும், விளக்கினுல் ஒரு பதார்த்தத்தைக் காணவேணுமென்றபோது மங்கள தீபமாகவும், திருப்பரியட்டம் அபேக்ஷிதமானபோது அழகிய பட்டாகவும்,

தழுவவேண்டியபேக்ஷிதமானபோது தழுவிக்கொள்ளும் மெத்தையாகவும் இருப்பார் என்பதாம். இப்படி இந்தத் திருவநந்தாழ்வான் ஸர்வகார்யத்திலும் ஸர்வேசுவரன் உகந்த வடிமைகளைச் செய்துவருகின்றதினுல் இவருக்குச் சேஷன் என்ற பெயர் வழங்கலாயிற்று.

சும— ஆசார்யன், ஜ்ஞாநாநுஷ்டானமுடையவனுயிருக்கவேண்டுமென்றுரைத்தீரே. அத்தகைய ஆசார்யனைக்காணுதல் அரிதன்ருே? மனுஷ்ய சரீரத்தைப்பெற்ற எவரும் தோஷமுடையவர்களாகத்தானே காணப்படுகிருர்கள்?

சுகு— அப்படியல்ல உன்மாம்சக்கண்ணுக்கு அப்படித்தான் காணப்படுவார்கள். அவர்கள் நீர்பூத்ததழல் போன்றிருப்பார்கள். அவர்கள் ஸர்வேசுவரனை வெகு சுலபமாகக் கைப்பற்றவல்லவர்கள். ஸர்வேசுவரன் கேவலமான பிறவிசெய்கைகளைச் செய்தாலும் அகடிதகடனு ஸாமர்த்யமுடையவனுயிருப்பது (சேராதவற்றைச் சேர்ப்பது) போல இவர்களுக்கும் அந்த வல்லமையுண்டு. அவர்கள் குற்றங்களை நாம் நினைக்கவும், சொல்லவும் அநதிகாரிகள். ஒரு ராஜாவானவன் ராஜவல்லவனுன மந்திரியை நியமித்துத் தன்னுடைய ராஜ்யத்தை அவனிடம் ஒப்பித்தால் பிரஜைகள் ராஜாவின் உத்ரவிற்குக் கீழ்ப்படிந்து மந்திரியின் ஆஜ்ஞைக்குக்கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அப்பொழுதுதான் ராஜாவின் உத்ரவிற்குக் கட்டுப்பட்டவராவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் ராஜதண்டனைக்குட்பட்டவராவார்கள். மந்திரி குற்றமுடையவனுயிருப்பானுகில் அதைக்கண்டு தண்டிக்க ராஜா வல்லவன். ஸர்வஜ்ஞனுயும், ஸர்வவல்லவனுயுமிருக்கின்ற ராஜாவுக்கு அவன் குற்றந்தெரியும். மந்திரியின் குற்றத்தைப் பிரஜைகள் விசாரித்தால் ராஜாவின் ஸர்வஜ்ஞத்வத்திற்குக் குறைவு ஏற்படும். ராஜா நல்லவஸ்து என்று அபிமானித்த பொருளைக் கேவலமாக நினைத்தல் மிகவும் குற்றமாம். இது நிற்க, ராஜ மஹிஷி (ராஜமனைவி) ப்ருஷ்டையானுல் அதைப் பிரஜைகள் சொல்ல வல்லரோ?

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

அப்படிச் சொன்னால் அந்தப்புரத்திற் செய்த குற்றமல்லவா? அவ்வாறு குற்றஞ்செய்தவர்களை ராஜா முதலில் தண்டிப்பான் என்ற விஷயம் யாவரும் அறிந்ததொன்றன்றோ? காமினியாயிருப்பாளொருத்தியின் தேகத்தின் அழுக்கெல்லாம் அவளிடம் விசேஷ காமியாயிருப்பானொருத்தனுக்கு மிகவும் உகப்பாயிருப்பது காணவில்லையா? அதுபோல ஸர்வேசுவரன் ஆசார்யபதவிகளைச் சிலர்க்குக் கொடுத்து அவர்கள்பாலுள்ள குற்றங்களையுங் குணமாகக் கொள்ளுகிறான். அந்த ஆசார்யர்களைக் கண்டிப்பதும், தண்டிப்பதும் அவனைச் சார்ந்ததாம். நமக்கு அவர்கள் எல்லாப் பிரகாரத்தாலும் உத்தேசியர்களாவார்கள். இக்கருத்துப்பற்றியே நம் பூர்வாசார்யர்களும் அருளிச்செய்திருக்கிறார்கள்.

சும— தேவரீர் உரைத்தபடி பூர்வாசார்யர்களில் எவர் எவ்விடத்தில் அருளிச் செய்திருக்கிறார்கள்?

சுகு— திருவரங்கத்தமுதனார் என்ற பெரியார் தாமருளிய 'இராமாநுஜ நூற்றந்தாதி' என்ற க்ரந்தத்தில் அருளிச்செய்திருக்கிறார்.

சும— அதை விவரிக்கவேண்டும்.

சுகு— திக்குற்றகீர்த்தியிராமாநுசனையென்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தைமேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பேதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே

சும— இதன் பொருள் என்ன?

சுகு— என்னால் செய்யப்பட்ட நிலைநின்ற தோஷத்தைப் போக்கி விளங்குகின்ற மேகம் போன்ற உதாரகுணமுடையவராய், எல்லாத்திக்குகளிலும் சென்று பரவிய புகழ்படைத்தவராயிருக்கிற உடையவரையடைந்த பெரியோர்கள், யாதொரு குற்றமுடையவராகவும், யாதொரு ஜன்மமுடைய

வராகவும், யாதொரு ஸ்வபாவமுடையவராகவுமிருந்தா லும், அந்தக்குற்றமும், அந்தப்பிறப்பும், அந்தவியல்வும் நம்மை அடிமைகொண்டு ரக்ஷிக்கும் என்பதாம். இன் னும், சிஷ்யன் ஆசார்யனுடைய தோஷத்தை ஆராய்வானு கில், அது மாதாவைப் பரீக்ஷை செய்வதோடொக்கும் என்று சொல்லப்பட்டுளது. ஆதலால் நீ இனிமேல் அது விஷயத்தில் கண்வையாதொழிவாய்.

சும— அடியேன் தெரியாமல் கேட்டவை எல்லாம் பொறுத் தருளவேண்டும்.

சுகு— ப்ரகிருதிவாஸனையால் இவ்வாறு வினவினுய் அது உன் தோஷமன்றென்று நாம் பொறுத்துக் கொண்டோம்.

சும— ஸ்வாமி! இன்னும் அடியேனிடத்தில் க்ருபை வரவில் லையா? அடியேனையு மொரு ஸச்சிஷ்யனுகக் கொள்ள லாகாதா? குரு க்ருபா ஸூர்யோதயத்தால் அடியே னுடைய அஜ்ஞானாந்தகாரம் போக்கவரிதா? வெளியிரு ளைப் போக்குகின்ற ஸூர்யனைக்காட்டிலும் உள்ளிருளைப் போக்கும் இந்த ஸூர்யன் விசேஷ சக்தியுடையதன்றோ ஆகையால் முற்கூறிய முக்குணங்களை விவரித்தருள வேண்டும்.

சுகு— முக்குணவியற்கைகளை மறையின் (வேதத்தின்) மறை பொருளை விளக்கிய பகவத்கீதையில் கீதாசார்யனுகிய கிருஷ்ணன் அருளிச்செய்திருக்கிறுன். இந்த க்ரந்தத்தை மிகவும் தெளிவாக அச்சிட்டுப் புஸ்தகசாலையில் வைத் திருக்கிறுர்கள். ஆதலால் அதிலுள்ள விஷயங்களை ஒரு வர் வாசலில் காத்திருந்து கஷ்டப்பட்டாமல் கற்றுக்கொள் ளலாம்.

(தொடரும்.)

81

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு உபயவேதாந்த வித்வான் ஸ்ரீ சிங்கராசார்ய ஸ்வாமி எழுதுவது.

(37-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படியன்றிக்கே அதிருஷ்டவிதயா மோக்ஷஸாதனமாக்குவது பர்த்ருபோகத்தை பார்யை வயிறுவளர்க்கைக் குறுப்பாக்குமாப்போலேயிருப்பதொன்று. ஆதலால் இந்த பக்திக்கு பலத்வாகாரமே ஸ்வாபாவிகம். ஸாதநத்வாகாரம் சேதனனுடைய புத்தியால் ஆரோபிதம். ஸ்ரீபாஷ்யத்தில் இதை ஸாதனமாக நிரூபித்திருப்பது அத்வைதமத நிராஸ தாத்பர்யத்தாலே. அதாவது:-அத்வைதிகளால் வாக்யார்த்த ஜ்ஞானமாவது மோக்ஷ ஸாதனமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் அந்த வாக்யார்த்த ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிற பக்திரூபாபந்ந ஜ்ஞானமே மோக்ஷஸாதனமாமென்று பிரதிபாதித்தபடி; பக்திக்கு ஸாதநத்வ ஸ்தாபகத்தில் தாத்பரியமில்லை. ஸ்ரீபாஷ்யம் ஸாத்யபக்திபரமென்றே ஈட்டில், "வீடுமின்முற்றவும்" பிரவேசத்தில் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. ஸாதநபக்திபரமாக நிரூபிப்பது சரமசுலோகத்துக்கு அங்கப்ரபத்திபரநிர்வாஹம் போலே.

இந்த பக்திக்கு ப்ரபத்தி அங்கமாயிருக்கும். கர்மயோகாசக்தனுக்கு கர்மயோகஸ்தானத்தில் ப்ரபத்தி அநுஷ்டிப்பதும் ஒன்றுண்டு; அப்படியே ஜ்ஞானயோகாசக்தனுக்கு ஜ்ஞானயோகஸ்தானத்தில் ப்ரபத்தி யநுஷ்டிப்பதுமொன்றுண்டு. அப்படியே பக்தியினுடைய நிஷ்பத்திக்காக ப்ரபத்தியநுடிஷ்ப்பது மொன்றுண்டு. இந்த விஷயத்தை "மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே" "த்வமேவ சாத்யம் புருஷம்பரபத்யேத்" என்று கீதாசார்யன் அருளிச்செய்தான். "ப்ரபந்நா தந்யேஷாம் ஙதிசதிமுகுந்தோ நிஜபதம்" "ப்ரபந்ந: சத்வேரா" என்று தேசிகனும் அருளிச்செய்தார்.

இப்படியிருந்துள்ள பக்தியோகத்தை அநுஷ்டிக்கிறவன் நித்யங்களாயும் நைமித்யங்களாயுமுள்ள கர்மாக்களை பக்திக்கு அங்கங்க

ளாகவே அநுஷ்டிக்கக்கடவன்: அந்தக் கர்மாக்களை, “விவிஹிதத் வாத்........” என்கிற ஸூத்ரத்தின்படி விஹிதபுத்தியால் அநுஷ்டிக்கக் கடவனல்லன். அப்படி விஹிதத்வ புத்தியால் அநுஷ்டிக்கிறவன் முமுக்ஷுவல்லாத புபுக்ஷுவான சேதனனே. பக்தியோக நிஷ்டனுக்கு கர்மாக்களை பக்திக்கு அங்கமாகவே அநுஷ்டிக்கவேணுமென்பதற்கு ப்ரமாணம், “ஸஹகாரித்வேநச” “அக்நி ஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சநாத்” என்ற ஸூத்ரங்களாம். இவற்றின் அர்த்தம். பக்தியோகநிஷ்டன் பக்தியோகங்களுக்கு ஸஹகாரியாக நித்ய நைமித்ய கர்மாக்களை அநுஷ்டிக்கக்கடவன்; அக்நிஹோத்ரம் முதலான நித்ய நைமித்திக கர்மாக்கள் பக்தியோக நிஷ்பத்திக்காகவே ஏற்பட்டவைகள். என்பதாம்.

அப்படி ப்ரமாணமிருப்பதால் பக்தியோகநிஷ்டன், விஹிதத்வ புத்தியினாலேயும் ஏன் அநுஷ்டிக்கக்கூடாது? என்னில் அப்படி விஹிதத்வபுத்தியால் அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் யோகதெசையில் நித்ய நைமித்திகங்களுக்கு லோபம்வருவதால் ப்ரத்யவாயம் ஏற்படும். அப்படி ப்ரத்யவாயம் ஏற்படும்பக்ஷத்தில், “ஸந்த்யாஹீநோ அசுசிர் நித்யம்” என்கிறபடியே பக்தியோகாநுஷ்டானத்துக்கு அநர்ஹனாகவே ஆவன். அங்கபுத்யா அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் அங்கியான பக்தியோகத்தினுடைய அநுஷ்டானத்துக்கு விரோதமில்லாமலிருக்கிறகாலத்தில் அநுஷ்டிக்கப்படவேண்டியதாகையால் இந்த தோஷம் வாராது. இந்த விஷயத்தை சுருதப்ரகாசிகையில் “அங்க்யவிரோதே அங்கமநுஷ்டேயம்” என்றும், யோகதெசையிலேற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்தால், ப்ரத்யவாயம் ஏற்படாதென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விஹிதத்வ புத்யா அநுஷ்டித்தாலும் யோகதெசையில் ஏற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்துக்கு “யோகமேவநிஷேவேத” என்கிற ப்ரமாணத்தின்படி மேல் அநுஷ்டிக்கப்படுகிற பக்தியோகமே ப்ராய:சித்தமாகுமென்றால் அந்த பக்தியோகம் அபுத்திபூர்வமாக ஏற்படுகிற பாபத்துக்கு ப்ராய:சித்தமாகுமேயல்லது, யோகதெசையில் புத்திபூர்வமாகச் செய்யப்படுகிற கர்மலோபங்களுக்கு ப்ராய:சித்தமாகமாட்டாது. இதையும் அபுத்திபூர்வகம் என்று சொல்லும்பக்ஷத்தில் இந்த கர்மலோபத்துக்கு

ஹேதுவான பக்தியோகத்தைத்திரும்பவும் அநுஷ்டிக்கவேகூடாது.

ஆதலால் பக்தியோகநிஷ்டன் நித்ய நைமித்திக கர்மாக்களை அங்கங்களாகவே அநுஷ்டிக்கக் கடவன். விஹிதபுத்யா அநுஷ்டிக்காமையால் யோகதெசையிலேற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்தால் ப்ரத்யவாயம் ஏற்படமாட்டாது.

ப்ரபன்னன் இந்த கர்மாக்களை கைங்கர்யபுத்யா அநுஷ்டிக்கக் கடவன். இதன் நிரூபணம் ப்ரபத்தி நிரூபணத்தில் விசதீகரிக்கப் படும். பக்தியோகநிஷ்டனுக்கு விஹிதத்வாகாரம் த்யாஜ்யம், அங்கத்வாகாரம் உபாதேயம். ப்ரபன்னனுக்கு விஹிதத்வாகாரமும் அங்கத்வாகாரமும் த்யாஜ்யம்; கைங்கர்யத்வாகாரமே உபாதேயம்.

இப்படி பக்தி ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டது. இந்த பக்தி, சாந்தோக்யம் முதலான உபநிஷத்துக்களில் அந்தந்த ப்ரகரணங்களில் சொல்லப்படுகிற அந்தந்த குணங்களோடு கூடிய ப்ருஹ்ம ஸ்வரூப விஷய பேதத்தாலேயும், ஸத்வித்யை முதலாகவுள்ள அநேக வித்யா பேதத்தாலேயும் வேறுபட்டிருக்கும். இப்படி பஹுப்ரகாரமான பக்திக்கு விஷயபேதமிருந்தபோதிலும் "விகல்போ விசிஷ்ட பலத்வாத்" என்கிற ஸூத்ரத்தின்படி அபரிச்சின்ன ப்ருஹ்மவிஷயக அநுபவரூபமான மோக்ஷபலம் ஏகரூபமாயிருப்பதால் பல பேதமில்லை. இப்படி ஏகரூபமாயிருந்துள்ள பலத்துக்கு ஸத்வித்யை முதலான வித்யைகள், அக்நியைக்குறித்து அரணிக்கட்டையும், நெருப்புக்கல்லும்போலே தனித்தனி காரணங்களாம்; குடத்துக்கு தண்டசக்ரங்கள்போலே இரண்டும் சேர்ந்து ஒன்றுபட்ட காரணங்களாகா.

இப்படி வித்யைகளுக்கு ப்ரத்யேகம் காரணத்வமிருக்கையாலே அவை வேறுபட்ட பலவாக வழங்கப்படும். இப்படி அபரிச்சின்ன ப்ருஹ்மவிஷயக அநுபவரூபமான பலம் ஒரேபடியாயிருப்பதால் நித்யர்களுக்கும், முக்தர்களுக்கும் ஈசுவரனுக்கும் பிராட்டிமார்களுக்கும் ஆநந்தத்தில் தாரதம்யமில்லை. ஆனாலும், அந்தந்த வித்யைகளில் உபாஸ்யதயா விஹிதங்களான குணங்களே அநுபாவ்யங்களாம். அப்படி உபாஸனத்தில் விஷயமல்லாத குணங்கள் அநுபாவ்யமாகா

வாம். இந்த விஷயம் "யதாக்ருது ரஸ்மிந் லோகே புருஷோ பவதி" "தம்யதாயதோபாஸதே ததைவபவதி"என்கிற சுருதிகளில் விளங்கும். இவற்றின் அர்த்தம், யாவனொருவன் எப்படிப்பட்ட குணத்தோடு கூடிய ப்ருஹ்மோபாஸநத்தைப்பண்ணுகிறானோ அவன் அப்படிப் பட்ட குணத்தோடுகூடிய ப்ருஹ்மவிஷயகமான அநுபவத்தை அடைகிறான் என்பதும் ப்ருஹ்மத்தை எந்தப்ரகாரமுடையதாக உபாஸிக்கிறானோ? அந்தப்ரகாரமுடையதாகவே அநுபவிக்கிறான் என்பதுமாம்.

இப்படியே ஸ்ரீ பாஷ்யத்திலும், சுருதப்ரகாசிகையிலும், திருக் குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியிலும் விளங்கும். ஸ்ரீ பாஷ்யத்தில் மூன்றாவது அத்யாயம் மூன்றாவது பாதத்தில் "ஏகஆத்மந: சரீரே பாவாத்" "வ்யதிரேகஸ் தத்பாவ பாவித்வாத்" என்கிற சூத்ரங்களில் சேதனன் ப்ருஹ்மஸ்வரூபத்தை உபாஸிக்கும்போதும், அந்தஸ்வரூபத்துக்குவிசேஷணமான தன்னை யுபாஸிக்கும்போதும் தன்னுடைய அபஹதபாப்மத்வாதி குணங்க ளோடுகூடிய ஸ்வரூபத்தையே உபாஸிக்கக்கடவன். அந்த அபஹத பாப்மத்வாதி விசிஷ்ட ஸ்வரூபமே அநுபாவ்யமாயிருப்பதால், என்று அநுபாவ்யமாயிருப்பதே உபாஸ்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே கார்யாதிகரணத்தில், "அப்ரதீகாலம்பநாந்நயதீதி" என்கிற ஸூத்ரத்தில் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு ப்ருஹ்ம ப்ராப்தியும், அபுநராவ்ருத்தியும் சொல்லப்பட்டிருப்பதால் ப்ருஹ் மாத்மக ஸ்வாத்மோபாஸநமே ஏற்படவேண்டுமென்று ப்ராப்யாநு குணமாக உபாஸநம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே வேதாந்த தீபத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ஜந்மாத்யதிகரண சுருதப்ரகாசிகையில்,"விபூதே:ச ஜிஜ்ஞாஸ்யாந்தர்பாவ உபாஸா த்ரை வித்ய தத்க்ருதுந்யாயாப்யாம் ஸேத்ஸ்யதி" என்று சொல்லப்பட் டிருக்கிறது. இதற்கு அர்த்தம், உபயவிபூதி விசிஷ்டப்ருஹ்மத்தையே அடையவேண்டுமாகையால் அதுவே உபாஸ்யமாகவேணும் என்று தத்க்ருது ந்யாயத்தாலேயும், "உபாஸாத்ரைவித்யாத்"என்கிற ஸூத் ரத்தாலேயும் ஸித்திக்கிறது என்பதாம். அப்படி "ரக்ஷதிகர்மவ்யப தேசாத்ஸ:"என்கிறஸூத்ரத்தில் த்யாநமும் ரக்ஷணமும் ஏகவிஷய

மென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே, ஆறாயிரப்படியில் நாலாவதுபத்து இரண்டாந்திருவாய்மொழியில், "கோதிலவண்புகழ் கொண்டுசமயிகள், பேதங்கள் சொல்லிப்பிதற்றும்பிரான்பரன்" என்கிறபாட்டின் வ்யாக்கியானவசரத்தில், ஓரோர் குணவிசேஷத்தை அனுபவித்தால் இந்த குணமல்லது மற்றொன்றறியேன் என்று அந்த குணத்துக்குத்தோற்று அடிமையாயிருக்கும் திவ்ய புருஷர்களாலே இதரானுபூதகுணங்களைக்காட்டிலும் ஸ்வாநுபூதகுணத்துக்கு வைலக்ஷண்யத்தை விவசராய்க்கொண்டு பரஸ்பரம் சொல்லிப் பிதற்றப்படுகிற என்று பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

ஸ்ரீ:

திவ்யப்ரபந்தங்களில் வழங்கும் சரித்திரங்கள்.

(க) பெரியதிருவடி.

"அநந்த கருடவிஷ்வக்ஸேநர்" என்று நித்யஸூரிகளை எண்ணி வருகிற கணனையில் இவர், இரண்டாவதாக எண்ணப்படுவார். ஸர்வேசுவரனுக்கு வாகனமாகவும், கொடியாகவுமிருந்து தொண்டு செய்பவர்; வேதஸ்வரூபி; மிகவும் வலிமைபடைத்தவர்; இது நிற்க, இவரைப்பற்றி நம்மாழ்வார் "பொருசிறைப்புள்" என்றும், "கறையணிமூக்குடைப்புள்" என்றும் அருளிச்செய்தார். 'கறையணிமூக்குடைப்புள்' என்பதற்கு ஈட்டில் "ப்ரதிபக்ஷத்தைக்கொன்று கறை கழுவ அவசரமின்றிக்கேயிருக்கையாலே கறையேறி அதுவே ஆபரணமாயிருக்கும் மூக்கென்னுதல். அன்றிக்கே, தாயார் 'புத்ரமுகங் காணவேணும்' என்னு மபிநிவேசத்தாலே முட்டையாயிருக்கிற பருவத்திலே ஒரு வுத்யோகத்தைப் பண்ணினளாய், அத்தாலோரடையாளம் பிறந்து அதுதான் எம்பெருமானுக்கு ஸ்ரீவத்ஸத்தோபாதியாய் அத்தை ஆபரணமாகவுடைய புள்ளென்றுமாம்" என்று பொருள் குறிக்கப்பெற்றுளது.

இன்னும் இவர், வேதஸ்வரூபியாய் விளங்குகிறவர் என்பதைக் கீழ்க்குறிப்பிடும் வரலாற்றாலும் அறியலாம். அதுவருமாறு:— ஆழ்வார் பதின்மர் அவதரித்து உலகிற்கு உபகாரஞ் செய்தார்கள். அவர்களில் பெரியாழ்வார், ஸ்ரீவல்லபதேவபாண்டியனது மஹா ஸபையில் "வேண்டிய, வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்றபடி பரதத்வ நிர்ணயஞ் செய்தற்குரிய வேதங்களெல்லாஞ் சொல்லிப் பொற்கிழி யறுத்தார் என்று சொல்லப்பட்டுளது. இதனால் இவர், வேதஸ்வரூபியாகிய கருடாம்சமாய் வந்தவதரித்தவராதலால் இங்ஙனம் வேதங்களோதிக் கிழியறுத்தாரென்பது தெளிவாகிறது.

இவ்வளவு பெருமைபடைத்த இவர், அஹங்காரங் கொண்டதினால் ஸர்வேசுவரனால் சிக்ஷிக்கப்பட்டு மிகவும் வருந்தினாரென்று திவ்யப்ரபந்தங்களிற் குறிக்கப் பெற்றுளது. அதுவருமாறு:—

"அடுத்தகடும்பகைஞற்காற்றேனென்றோடிப்
படுத்தபெரும்பாழிசூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன்கைக்கொடுத்தமாமேனிமாயவனுக்
கல்லாதுமாவரோஆள்."

என்று பொய்கையாழ்வாரால் முதற்றிருவந்தாதியில் (பா 80) அருளிச் செய்யப்பட்டது. இதில் சுமுக விருத்தாந்தம் அறியலாகும். ஸர்வேசுவரன் ஸ்வர்க்கலோகத்தில் உபேந்திர மூர்த்தியாய் அவதரித்தகாலத்தில், பெரிய திருவடி நாகலோகத்திற்சென்று அங்குள்ள நாகங்களையெல்லாம் தமக்கு ஆகாரமாக உட்கொண்டுவந்தார். இப்படி வருகிற காலத்தில், நாகலோகத்திலுள்ள நாகங்களெல்லாங்கூடிப் பெரிய திருவடியைப்பார்த்து ஸ்வாமி! "நீர் எங்களை அடியோடு நாசஞ்செய்வது முறையில்லை. உமக்கு நாங்கள் தினம் ஒருவராக உணவாகக் கடவோம்" என்று வேண்டிக்கொள்ள அதற்குப் பெரியதிருவடி உடன்பட்டு நாளொன்றுக்கு ஒவ்வொரு ஸர்ப்பமாக உணவு செய்துவந்தார். அப்பொழுது சுமுகன் என்ற பாம்பின்முறைவரவே அவன், உயிரிழக்கத்துன்புற்று உபேந்திரமூர்த்தியின் படுக்கைக் கட்டிலைச் சுற்றிக்கொண்டு 'என்னைக் காக்கவேண்டும்' என வேண்டினான்; உபேந்திரமூர்த்தியும் அவனுக்கு அபயமளித்தார்.

இஃதிங்ஙனமாக, பெரிய திருவடி பாதாளஞ்சென்று சுமுகனைத் தேடிக்காணுமல் இங்கு அவன், உபேந்திரமூர்த்தியை அடைக்கலம் புகுந்துகிடப்பதைக்கண்டு அடங்காக்கோபங்கொண்டு, உபேந்திர மூர்த்தியைப்பார்த்து "உன்னை எண்ணித்தொலையாத நாளெள்ளாம் சுமந்து திரிந்தேனே என் வயிற்றில் மண்ணைவாரிப் போட்டுவிட்டாயே" என்று சொன்னுர். அப்பொழுது உபேந்திரர் இந்தப் பெரிய திருவடியின் அஹங்காரத்தை சக்கரத்தாழ்வானைக்கொண்டு போக்க வேண்டுமெனத் திருவுள்ளங்கொண்டு பெரியதிருவடியைப்பார்த்து "நீ எம்மைச்சுமக்கும் அவ்வளவு சக்தியுடையவனுயிருப்பையாகில் நாம் வலதுகையில் தாங்கியிருக்கின்ற இந்தச் சக்ராயுதத்தைத்தாங்குவாய்' என்று சக்கரத்தாழ்வானைக் கையில் கொடுத்தார். பெரிய திருவடி அதைத் தாங்குதற்கு முடியாமல் பலமெல்லாங்குறைந்து வருந்தி ஸர்வேசுவரனை நோக்கி ஸ்வாமி! "தேவரீரால் அடியேனுக்குச் சக்தியுண்டாயிற்றென்றறியாமல் அஹங்கரித்து தேவரீர் திருவடிகளில் இங்ஙனம் அபசாரப்பட்டேன் அதை க்ஷமித்தருளவேண்டும்" என்று ஸ்தோத்ரஞ் செய்தார். உபேந்திரரும் கிருபையோடு க்ஷமித்தருளி "இந்தச்சுமுகனை நீயே ரக்ஷிக்கக்கடவாய்" என்று பெரிய திருவடிக்கு அடைக்கலப் பொருளாக்கினுர். பெரிய திருவடியும் களிப்புற்றுச் சுமுகனைத் தமக்கு மாலையாக அணிந்துகொண்டார்.

நம்மாழ்வாரும் இந்த சுமுகவிருத்தாந்தத்தைக் குறித்துப் பேசியிருக்கிறுர். அது வருமாறு:– சீதாபிராட்டி, அசோகவனமாகிற சிறையிலிருந்து, துன்புற்றரற்றியதுபோல நம்மாழ்வார் ஸர்வேசுவரனை நோக்கி "இந்தத் தேஹமாகிய சிறையிலிருக்குமிருப்பு அடியேனுக்கு மிகவும் துன்பமாக விருக்கிறது; இது, மேன்மேலும் அஜ்ஞானத்தை விளைவிப்பது; க்ரூரமுடையது. ஆதலால் இதைப் போக்கியருள வேண்டும்" என்று வெண்டிக்கொள்கிற "உண்ணிலாவிய" என்ற திருவாய் மொழியில்,

> "விண்ணுளார்பெருமாற்கடிமைசெய்வாரையுஞ்செறுமைம்புலனிவை
> மண்ணுளெனைப்பெற்றுலென்செய்யாமற்றுநீயும்விட்டால்
> பண்ணுளாய்கவிதன்னுளாய்பத்தியினுள்ளாய்பரமீசனேவந்தென்
> கண்ணுளாய்நெஞ்சுளாய்சொல்லுளாயொன்றுசொல்லாயே."

என்று அருளிச்செய்திருக்கிறார்.

இந்திரியங்கள், நித்யஸூரியாகி பெரிய திருவடி நாயனாரையும் ஒரு காலவிசேஷத்தில் வருத்தின; என்றால் மண்ணிற் பிறந்திருக்கிற என்னை வருத்துதற்குச் சொல்லவேண்டாவென்று இந்திரியங்களின் கொடுமையை விளக்கிக்காட்டுவதற்காக இங்கு இவ்விருத்தாந்தம் எடுத்தாளப்பட்டது.

பரிபாடல் என்ற சங்கநூலில் கடுவனிளவெயினனார் என்ற புலவர், பெரிய திருவடி ஒருகால விசேஷத்தில் அஹங்காரங்கொண்டதை ஸர்வேசுவரன் அகற்றினான் என்ற விஷயம்,

"ஆயிரவணர்தலையரவுவாய்க்கொண்ட
சேவலூர்தியுஞ்செங்கண்மாஅ
லோவெனக்கிளக்குங்காலமுதல்வனை
யேஎஇனகிளத்தலினைமைநற்கறிந்தனன்"

என்ற அடிகளால் உரைத்திருக்கிறார். இவ்வடிகளுக்குப் பரிமேலழகர்கூறிய பொருளும் இங்கறியத்தக்கதாம். அது வருமாறு:— "ஆயிரமாகிய கிளர்ந்த தலையையுடைய அரவை வாய்க்கட்கொண்ட நின் ஊர்தியாகிய சேவலும் நொந்து, செங்கண்மாலே! ஓ! என் அலறும் காலமுதல்வன் நீ; என்றது, நீ இந்திரற்கு இளையோனாய் அசுரரை வெல்கின்ற காலத்து 'இவ்வெற்றியெல்லாம் நின்னின் ஆயவல்ல; இவனைத் தாங்கிச் செல்கின்ற என்னின் ஆய' என்று கருடன் தன்னை வியந்திருப்ப, அக்கருத்தை ஒழித்தற்பொருட்டு 'நீ என் மெய்ம்முழுதும் தாங்கல் வேண்டா; ஒருகையிற் சிறுவிரற்றுணை தாங்கினையெனின் நீ கூறியவாறே யாகும்' என்று அத்துணை அவன்மேல் வைப்ப அவ்விரற்கு ஆற்றாது பாதலத்து வீழ்ந்து நெடுங்காலம் கிடந்து துதித்தான்; அத்தன்மைத்தாய வலி தாழக்கொண்ட மெய்களினு முடையையென்றவாறு." என்பதாம்.

இவ்வாலாறுகளால் எவ்வளவு பெருமையுடையரேனும் அஹங்காரமுடையோர் துன்பமுறுவர் என்பது விளங்கும்.

ப. அ.

---

9. கமலமுற்றவ ளுலகுபெற்றவள்
திருவுரத்திடை குடியிருப்பவள்
கமைபடைத்தவ ளழகுமிக்கவள் நெடுவேலை

கடையுமப்பொழு தினிலுதித்தவள்
புனிதலக்குமி பொருதினத்திடை
கழல்செறித்திடு திருவடித்தொழு திறையோனே

நிமலநிட்கள ப்ரியமுனக்குள
தெவரிடத்தினி லெனவுரைத்தலு
1 நிறைவிருப்பொடு னிசைபுலப்படு கவிபாடும்

நிபுணர்சொற்களி லெனவுரைத்தனை
யதனையுட்கொடு 2கவியுரைக்கினு
நினதுபொற்றிரு வடிதுதிப்பது தவிரேனே

சமிதைபத்திர மிகுதருப்பைகள்
பசுவிருத்தொடு விபுதர்மெய்த்தவர்
சருமநற்றுகி லுரலுலக்கைகள் நடுயூபம்

சருவரைத்திடு சிலையுருக்குநெய்
3 யரணிநத்தொடு கயிறுநெற்பொரி
சகடைமற்றுள கலமனைத்தொடு முறைபாலே

யமரர்பெற்றிட வவிகொடுத்தொரு
வருடமிப்படி கலைமுகத்தவ
னணிமகத்திடை தயரதப்பெயர் மகராசன்

அரியமுத்தழல் வளரவுத்தம
நெறிநடத்தலு மவனிடத்தினி
லவதரித்திட வெனநினைத்தருள் பெருமாளே.

1 நிறைவிருப்புட. 2 கவிவிரிக்கினு. 3 யரணி நற்றெடு கயிறு நற்பரி.

[குறிப்பு:—கமலம்-தாமரை. உரம்—மார்பு. களமை-கூமை-பொறுமை. வேலை-கடல். கழல்-கொடை வீரம் முதலியவற்றுன் மேம்பட்ட ஆடவர் காலணி. செறித்திடு-கட்டப்பட்ட. நிமலன்-சுத்தன். நிட்களன்-உருவமில்லாதவன். நிபுணர்-சாமர்த்தியவான்கள். சமிதை-சமித்து-ஓமவிறகு. பத்திரம்-புரசு முதலிய இலை. இருத்து-ரித்யுக்கள். விபுதர்-தேவர். சருமம்-கிருஷ்ணஜிநம். துகில்-வஸ்திரம். யூபம்-தறி. சரு-தேவருணவு. அரைத்திடு சிலை-அம்மி. அரணி-தீக்கடைகோல். நத்து-சங்கு. சகடை-வண்டி. அமரர்-தேவர். அவி-தேவர்க்கு வேள்வித்தீயிற்கொடுக்கும் உணவு. கலைமுகத்தவன்-கலைக்கோட்டு முனி. மகம்-யாகம். முத்தழல்-ஆகவநீயம், காருகபத்யம், தக்ஷிணாக்கினி என்பன. உத்தமம்-நன்மை. நெறி-வழி. அவதரித்தல்-பிறத்தல்.]

10. பாதித்ரி யம்பக னுந்தி நான்முக னம்புய மங்கை
பாக மிகுந்த வரங்கண் மதிபானு
பாத நெடும்புவி கங்கை வேத மியம்புவ துன்சு
பாவ [1]முணர்ந்திட லெந்த [2]வகையேயாம்
யாதுமுன் வஞ்ச வுடம்பு வேறிலை யிங்கொரு சிந்தை
யாவை [3]விளம்பிலு மன்பு [4]தவிராதே
யாரைவ ணங்கினு நண்பி னுரை யிணங்கினு நெஞ்சி
லாரை விரும்பினு மங்கு நினதாமே
ஓது மிரண்டறு திங்கள் வேள்வி நடந்தபின் வந்தொ
ரூனமில் பிண்டம் வழங்கி யொருபூதம்
ஓடி மறைந்திட மைந்தர் பேறினி யுண்டென நெஞ்ச
மோகை யுறுந்தவ னம்பொ னடிசூடிக்
கோதறு பிண்டம் வகிர்ந்து தேவிய ரொன்றொ டிரண்டு
கோதைய ருண்டிடு மென்று முறையாலே
கோமக [5]னன்று வழங்க மாதவ முன்பு புரிந்த
கோசலை பங்கொடு சென்ற பெருமாளே.

[குறிப்பு:—த்ரியம்பகன்-முக்கண்ணன்-சிவன். உந்தி-கொப்பூழ். அம்புய மங்கை-இலக்குமி. உரம்-மார்பு. மதி-சந்திரன். பாநு-சூரியன். சுபாவம்-இயல்பு. இரண்டறுதிங்கள்-ஒருவருடம். வேள்வி-யாகம். ஊனம்-குறை. ஓகை-விருப்பம். தவன்-கலைக்கோட்டுமுனி. கோமகன்-தசரதன். வழங்க-கொடுக்க.]

---

1 முணர்ந்திடி லிந்த. 2 வகையேயோ. 3 யியம்பினு. 4 தவருதே. 5 னின்று.

11. மாலையை முடித்து விளங்கு
சேலையை யுடுத்து நிறைந்த
வாண்முக மினுக்கி நெருங்கு முலைமீதே

மாமணி நிரைத்து முயங்கு
தோள்களை யசைத்து நடந்து
வாள்பொரு கடைக்க ணெறிந்து தெருவூடே

சாலுமிளை ஞர்க்கு மிகுந்த
[1] வாதைவரு வித்திடு பெண்கள்
தாமிடு துவக்கி லழுந்தி யயர்வேனைத்

தாமத குணத்தி லுமந்த
ராசத குணத்தி லுமுந்து
சாதுகுண நிட்டையி லென்று விடுவாயே

யாலிலை கிடக்கை தணந்து
வேலையி னிருக்கை திறம்பி
யாதவ னிடத்தி லுமின்றி யமரேசன்

ஆமரா சிருப்பு முனிந்து
மாகயிலை வெற்பொடு கஞ்ச
மாதியிட முற்று மகன்று கரைகாணக்

கோலமறை யுச்சி துறந்து
மாதவர் மனத்தை நெகிழ்ந்து
கோகனகை சொர்க்க மிகந்து வளர்பாயற்

கோளரவை விட்டு விகங்க
பூபதி கழுத்தை மறந்து
கோசலை வயிற்றி லிருந்த பெருமாளே.

[குறிப்பு:—வாண்முகம்-ஒளிபொருந்திய முகம். முயங்குதோள் பொருந்திய தோள். பொரு-தாக்குகின்ற. துவக்கு-கட்டு. தணந்து-நீங்கி. திறம்பி-மாறி. ஆதவன்-சூரியன். கோகனகை-இலக்குமி. சொர்க்கம்-தனம். இகந்து-நீங்கி. கோளரவு-வலியபாம்பு-ஆதிசேடன். விகங்கபூபதி-கருடன்.]

---

1 வோகை.

12\. கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயறிருந்து முற்றிப் பெயர்ந்து
கடையில்வந் துதித்துக் குழந்தை வடிவாகிக்

கழுவியங் கெடுத்துச் சுரந்த
முலையருந்தி விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடையாடி

யரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
யவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி

அரியபெண் களைப்பற்றி நொந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
[1]தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

இரவியிந்த்ரன் வெற்றிக் குரங்கின்
அரசரென்று மெய்ப்பற்ப வுந்தி
யிறைவ[2]னெண்கி னிற்கர்த்த னென்று நெடுநீலன்

எரியனென்று மைப்பற்று கண்டன்
அனுமனென்று மொப்பற்ற வண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து வனமேவத்

தரையிடம் பிடிக்கச் சுமந்த
திருவநந்த னுக்ரப்ர சண்ட
தவளசங்கு சக்ரத்தொ[3]டன்று பிரியாதே

தனியுடம் பெடுத்துத் தயங்கு
மினுெரென்று சுற்றுத் துலங்கு
தயரதன்ற வத்திற் பிறந்த பெருமாளே.

[குறிப்பு:—குதம்பை-ஒருவகைக்காதணி. பிணியுழன்று-நோயினால்வருந்தி இரவி-சூரியன். பற்பவுந்திஇறைவன்-பிரமன். எண்கினிறகத்தன்-ஜாம்பவான். எரியன்-அக்கினி. மைப்பற்றுகண்டன்-சிவன். அண்டர்-தேவர் உக்ரம்-வேகம். பிரசண்டம்-வீரம். தவளம்-வெண்மை. துலங்குதல்-விளங்குதல்.]

---

1 தமையவுன், 2 னெண்கினக்கர்த்த, 3 டொன்று.

13. நளிகடல் பூத மெடுத்த திக்கொடு
வரைகள் சுராசுரர் பற்பன் முக்கண்ன்
நடவு சராசர முற்று மற்றுன ததிருப

நணுகி விசார முறைத்து நித்தமும்
நுணுகிய கேள்வி படைத்து மப்படி
நவில்வது தூரமெனக் குறித்துனை மதுசூதன்

துளவணி மாலரி க்ருஷ்ண னச்சுதன்
நரஹரி கேசவ னத்ரி விக்ரம
சொருபன் முராரி ப்ரசித்தன் விஷ்ணுமண் மகள்கேள்வன்

சுரிவளை யாழியன் மச்சன் வாமனன்
மரகத மாய னெனத் திருத்திய
துதிபெறு பேர்பல விட்ட ழைத்திடு மெனையாள்வாய்

இளையகை கேசி வயிற்றி லுத்தம
பரத குமார னுதிக்க நட்புடன்
இணைபிரி யாத சுமித்திரைப் பெயர் மடமாதின்

இருவிழி போல விலக்கு வப்பெய
ரறிவுடை யானொடு சத்து ருக்கனன்
இருவர்க ளாகி யுதிக்க வித்திற மொருமூவர்

கிளரிளை யார்கள் சிறப் புறத்தச
ரதநர பாலனு மிக்க புத்திரர்
கெழுமிய நால்வ ரெனக் கனத்தபொன் மழைவிச

க்ரகநிலை நாள்கண் முகுர்த்த மொப்புற
வருபுனர் பூச தினத்தின் முற்படு
கிளிமொழி கோசலை பெற்றெ டுத்தருள் பெருமாளே.

[குறிப்பு:—நளி-குளிர்ச்சி. வரை-மலை. பற்பன்-பிரமன். நடவுதல்-செலுத்தல். சராசரம்-அசையும் பொருளும் அசைவில்பொருளும். அதிருபம்-மிகச்சிறந்தவடிவம். விசாரம்-ஆராய்ச்சி. உறைத்து-உறுதிபெற்று. கேள்வி-உபதேசம். நவில்வது-சொல்லுவது.]

14. படாப்ர வாள வலங்க்ருத பூஷண
கராத்ரி ரூப சுகந்த மனோகர
பராக்ர மாதுல துங்க பயோதர மடவார்தம்

பராக்கி லேதிரி யுங்குண கீனன்மெ
யுறாத்து ரோகி யிடும்பன் வியாகுலி
படாத்[1]துராக்ருத தொந்த மெலாமுறு கொடியேன்யான்

கடாக் கடாவி வருஞ்சம னூர்பொரு
பிராப்தி யாயுயிர் நின்று வெரீவரு
கனுப்ர கார மெனும்படி போவதன் முனமேநீ

கராத்தன்[2]வாயற வந்தது போலவென்
விடாய்க்கு மேவெளி நின்றுக்ரு பாகர
கடாக்ஷ மானது தந்து பராகதி யருள்வாயே

நடாத்து நேமி யசஞ்சல னேசக
வியாத்தி யான் பரஞ்சுட ரேசெழு
நருத்[3]து ழாய்புனை யெம்பெரு மானெனமை யுடையோனே

நமோத்து நாரண வென்றிமை யோர்தொழ
வுலாத்து மோர்கரு டன்புய மேறியு
நிகார்ப்ர வாசம்வி டுஞ்சிவ னுன்முகன் முதலோரென்

றுடாப்ர வாக விலங்கையின் மீதுள
விராக்க தாதியர் கொண்டுள நீள்வர
மயோக்ய வாழ்வொ டடங்கலு நீறெழ நரணுகி

பராக்கு லாவிய பொங்கணை பாழ்பட
விடாப் பயோததி யும்பொலி வேயற
வியோத்தி மாநக ரந்தனின் மேவிய பெருமாளே.

[குறிப்பு:— படாம்-வஸ்திரம். ப்ரவாளம்-பவளம். அலங்க்ருத-அலங்கரிக்கப்பட்ட. பூஷணம்-ஆபரணம். கராத்ரி-யானை. ரூபம்-வடிவு. சுகந்தம்-நறுமணம். மனோகரம்-அழகு. பராக்ரமம்-வீரம். அதுல-ஒப்பற்ற. துங்கம்-உயர்வு. பயோ

---

[1] துராகத. [2] வாயுற. [3] துழாயணி.

திரம்-திண்ணம். மடவார்-பெண்கள். பராக்கு-அசட்டை. குணகேனன்-குணமற்றவன். மெய்-சத்யம். துரோகி-கொடும்பாவி. இடும்பன்-அகந்தையுடையவன். வியாகுலி-துக்கமுடையவன். துராக்ருதம்-கெட்டநடை. தொந்தம்-ஒன்றோடொன்று முரண்பட்டது. சமன்-யமன். ப்ராப்தி-அடைவு-முடிவு. வெரீ-பயந்து. கரா-முதலை. விடாய்-இங்கு பரமாத்மாவையடையவேண்டுமென்ற விருப்பு. க்ருபாகரகடாக்ஷம்-கருணைக்கிருப்பிடமான பார்வை. பராகதி-மேலான பதவி. நேமி-சக்கரம். நடாத்தல்-நடத்துதல். அசஞ்சலன்-அசைவற்றவன். சகம்-உலகம். வியாப்தி-நிறைவு. பரஞ்சுடர்-மேலானஒளி. நறை-தேன். நமோத்து-நமோஸ்து-வணங்குவார் கூறும் கூற்று. நகார்-நகர். 'சிவன் நான்முகன் முதலோர் உம்நகார்ப்ரவாசம்விடும் என்று' எனக்கூட்டிச் 'சிவனும் நான்முகனும் முதலாகிய தேவர்கள் எல்லாரும் உங்கள் பட்டினவாசத்தைவிட்டு (விலங்கினங்களாக) வாருங்கள் என்று கூறி' என்று பொருள்காண்க. அடா-அடையமுடியாத. பிரவாகம்-நீர்ப்பெருக்கு. அடங்கலும்-முழுதும். நீறெழ-பொடிபட-அழிய. நரனாகி-மனிதவடிவுடையனாகி. அராக்குலாவியபொங்கணை-பாம்பாகியவிளக்க மிக்க சயனம். விடாப்பயோததி-நீங்காது பள்ளிகொண்டருளும் பாற்கடல். பொலிவு-விளக்கம்.]

15. வீழுடம்பு தானெடுத்து நின்ற
 [1]மானிடங்க ளாமிறைச்சி யெங்கு
 மேலெழுந்த வாசையிச்சை [2]யொன்றி வருகோவின்
மீதடர்ந்து கோவையற்ற பின்பு
 கோபவங்கி மீதிவிட்டு வெந்த
 மேனிகண்டு வாய்மடுத் தருந்து மொருகாலன்
பாழிவிந்த நீள்பிறப்பில் [3]வந்த
 லாபமொன்று மேயிலைத் திரிந்து
 பாதகங்க ளேபடைத்து வெம்பி யுழல்வேனோ
பாரதொந்த மாயையைக் கடந்து
 ஞானசிந்தை யாலனைத்தும் வென்று
 பாதசெஞ்ச ரோருகத்தி லென்று புகுவேனோ
வாழுமுண்ட காசனத்தன் மைந்த
 னிரண்டு நாளினிற் புகன்ற
 வாய்மைகொண்டு நீர்விடுத்து மஞ்சள் திமிராமேல்

[1]மானுடங். [2]யென்று. [3]வந்து.

மாலைதண்டை யாழிபொற் சதங்கை
காறைசங்கு நாணெடுத் தணிந்து
மார்புகண்கை கான்மினுக்கி யண்ட மொடுபூமி

யேழுமுண்ட வாய்விளக்கி யெங்கள்
கோசலன்கு மாரிமுற்ப யந்த
ராணிபன்பொ டேகொடுக்க நெஞ்சு களிகூர

ராசவம்ச மேருவொத்த தந்தை
யாகமொன்ற வேயணைத் திருந்து
ராமனென்று பேரிடக் கிடந்த பெருமாளே.

[குறிப்பு:—இறைச்சி-மாமிசம். மானிடம்-மானுடம்-மனிதப்பிறவி. ஆசை-அன்பு. இச்சை-விருப்பம். ஒன்றி-பொருந்தி. கோலின்-தண்டத்தினால். மீதடர்ந்து-மேலேபுடைத்து. கோவை-உடற்கட்டு. கோபஅங்கி-கோபமாகிய நெருப்பு. வாய்மடுத்து--வாயிற்பெய்து. அருந்துதல்--உண்ணல். காலன்-யமன்-வெம்பி-வாடி. உழலுதல்-அலைதல். பாரதொந்தமாயை--கடத்தற்கரிதாய்ப் பெரிதாய் முரண்பட்டுத் தோன்றும் மாயை. பாதசெஞ்சரோருகம்-திருவடியாகிய செந்தாமரைமலர். முண்டகாசனத்தன்-பிரமன். முண்டகர்சனத்தன் மைந்தன்--பிரமன்மகனாகிய வசிட்டன். புகலுதல்--சொல்லுதல். வாய்மை-வாக்கு. இமிர்தல்-பூசுதல். தண்டை-காலணி. ஆழி-மோதிரம். நாண்-அரைஞாண். ஆகம்-மார்பு. ஒன்ற-பொருந்த.]

16. வேலியடை யாப்பயிர் நெடுங்கரை யற்றபுனல்
தாய்முலை பெறாச்சிறு குழந்தை தருக்குமிள
வேனிலடை யாக்குயில் கரும்புய லற்றமயில் அரசாளும்

வீரனையி லாப்புவி மதங்கய மற்றபடை
கால்விசை பெருக்கல மரும்பொறை கெட்டதவம்
வேதமறு பூச்சுர னருங்கவி யற்றவவை பலநூலின்

சீலமுண ராக்கவி மடந்தையை யற்றமனை
நாணமறு கோற்றொடி விருந்துவி லக்குகுடி
சேர்பொருளிலாக்குறை பிறந்த நலத்திளமை கதிராளி

தேசமரு வாக்கமல மிங்கிவை யொத்துமுழு
ஞானமறு மாக்கையொ டுழன்ற வெனக்குமறை
தேடுமிரு தாட்டுணை வழங்க நினைப்பதுவு மொருநாளே